2013 மே 9]

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் கோரும் இடத்தில் பொறியியல் கல்லூரி துவக்குவதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 443, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.*

வினா வரிசை எண் 444, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

444—

மான் பூங்கா

*__22068__—**திரு. நயினார் நாகேந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி தொகுதி, சங்கர் நகர், கங்கைகொண்டான் பகுதியில் மான் பூங்காவை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருநெல்வேலி தொகுதி, சங்கர் நகர், கங்கைகொண்டான் பகுதியில் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு திட்டத்தின்கீழ் மான் பூங்காவினை அமைக்கும் திட்டத்தினை ஐந்தாண்டுகளில் நிறைவேற்றத்தக்க வகையில் ரூ.365 இலட்சத்திற்கு திட்டப் பிரேரணை ஒன்று அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மானம் பெரிது என்று வாழும் மனிதர்களை, மான் என்று சொல்வதில்லையா' என்பது புரட்சித் தலைவர்*

அவர்களுடைய பாடல். இந்தியாவில் இருக்கின்ற எல்லா தலைவர்களைக் காட்டிலும் மானுக்கு நிகரான, தலைசிறந்த தலைவர் ஒருவர் இருக்கிறார் என்றால் அது நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-10

இந்தக் கேள்வி எழுதிக் கொடுக்கப்பட்டு, இன்றுதான் அது எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான விடையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று வாசித்திருக்கிறார்கள். ஆனால், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாகவே விதி 110-ன்கீழ் கங்கைகொண்டானில் மான் பூங்கா அமைத்துத் தரப்படும் என்கிற நல்ல செய்தியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிக்கையாகத் தந்திருக்கிறார்கள். திருக்குறளில் 110-வது அதிகாரம் நன்றி என்கின்ற அதிகாரம். எனவே, எனது நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 445, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

445—

இரயில்வே மேம்பாலம்

***24728—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை சுங்கச் சாவடி பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?